2013 ஏப்ரல் 9]

மீட்டர் தூரம் இருக்க வேண்டும். 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்பது கூட்டுறவுச் சட்டத்தின் விதி. இது இருந்தபோதிலும், அங்கே இருக்கக்கூடிய உள்ளூர்ப் பிரச்சினை, சாதிப் பிரச்சினை மற்றும் ஏதாவது ஒரு பிரச்சினை இருக்குமேயானால், அங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட இணைப் பதிவாளர் மற்றும் தாலுகா அலுவலர்களுடன் கலந்து பேசி, அங்கே இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்க்கின்ற வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே அந்த நியாய விலைக் கடையைப் பிரித்துக் கொடுக்கலாம். பிரித்துக் கொடுப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. வாய்ப்பு இல்லாதபட்சத்தில் அதனுடைய முக்கியத்துவம் கருதி அவர்கள் அனுப்பும்பொழுது, நிச்சயமாக அந்தக் கடை பிரித்துக் கொடுக்கப்படும். மாவட்ட உணவுக் கழக தலைமையகத்திற்கு அனுப்பிவைத்தால், கூட்டுறவு, உணவுத் துறையின் மூலமாக நடவடிக்கை எடுத்து, அதிவிரைவிலே அந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 186, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

186—

பாசன வாய்க்கால்

*__6081__—**திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதியிலுள்ள முட்டல் ஏரியை ஆழப்படுத்தி, பாசன வாய்க்கால் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், முட்டல் ஏரியை ஆழப்படுத்தி, கரையை உயர்த்தி, பாசன வாய்க்கால் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். முட்டல் ஏரியின் நீர்ப்பிடிப்புப் பகுதி வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளபடியால், முட்டல் ஏரியை ஆழப்படுத்த வனத் துறையின் அனுமதி பெற வேண்டும். மேலும், தற்போதுள்ள ஏரியின் கரை நல்ல நிலையில் உள்ளபடியாலும், மதகு மற்றும் பாசன அமைப்புகள் சரியாக உள்ளபடியாலும் தற்போது முட்டல் ஏரியை சீரமைப்புச் செய்வதற்கான திட்டம் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரை கோடி கழகத் தொண்டர்களுடைய இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்ற, மாட்சிமை பொருந்திய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

எனது தொகுதிக்குட்பட்ட முட்டல் ஏரியானது சுமார் 50 ஆண்டு காலத்திற்கு முன்பு கட்டப்பட்டது. நிறுவப்பட்ட நாள் முதல் இதுநாள் வரை அந்த ஏரி தூர் வாரப்படவில்லை. இந்த ஏரியின் கொள்ளளவு 60 M.c.ft. *ஆகும். ஆனால், தற்சமயம் இந்த ஏரியில் தூர் நிரம்பியிருப்பதனால் 20* M.c.ft.*-ஆக இருக்கிறது. ஆகவே, இந்த ஏரியைத் தூர் வாரினால், சுமார் 5 கிலோ மீட்டர் நீளத்திற்கு நிலத்தடி நீர்மட்டம் உயர்வதோடு மட்டுமல்லாமல், அங்கேயிருக்கின்ற கல்லாநத்தம், துலுக்கனூர், அம்மம்பாளையம் மற்றும் ஆத்தூர் நகரப் பகுதிகளுக்குக் குடிநீர் ஆதாரமாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து, முட்டல் ஏரியைத் தூர் வாரிக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அந்த ஏரியைத் தூர் வார தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.

திரு. சு. மாதேஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கோரிக்கையைப் பரிவுடன் ஏற்ற மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 187, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

187—

கால்நடை மருத்துவமனை

***5078—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, அஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், நாயக்கனூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பர்கூர் தொகுதி, அஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்திலே, நாயக்கனூர் கிராமத்திற்கு ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய அரசு விதிகளின்படி, 3,000 கால்நடை அலகுகள் அந்தப் பகுதியிலே இருக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால், அந்தப் பகுதியிலே 2,400 கால்நடை அலகுகள்தான் இருக்கின்றன.